## திசாபுத்தி பலன்கள்

பிறப்பின் முதலே நவகிரகங்கள் நம் குணநலன்கள் மற்றும் பண்புகளை எப்படி கட்டுப்படுத்துகின்றதோ அதைப்போலவே நம் வாழ்வில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் திசாபுத்தி மூலம் கட்டுப்படுத்துகின்றன.

அதாவது திசா என்பது ஒரு கிரகம் குறிப்பிட்ட காலம் வரை நம்மை கட்டுப்படுத்தும் காலம் ஆகும்.

அந்த குறிப்பிட்ட காலம் முழுவதும் ஒரு கிரகம் மட்டும் நம்மை ஆட்சி செய்வதில்லை. ஒரு கிரகத்தின் திசையில் அனைத்து கிரகங்களும் ஒரு குறிப்பிட்ட நாட்கள் என அனைத்து கிரகங்களும் ஆள்கின்றன.

ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலம் என பகுத்து மானிடப் பிறவியின் ஆயுட்காலம் **120** வருடங்கள் என நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

### ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள காலம் பின்வருமாறு:

கேது திசை காலம் - **7** வருடம்

சுக்கிரன் திசை காலம் - **20** வருடம்

சூரியன் திசை காலம் - **6** வருடம்

சந்திரன் திசை காலம் - **10** வருடம்

செவ்வாய் திசை காலம் - **7** வருடம்

ராகு திசை காலம் - **18** வருடம்

குரு திசை காலம் - **16** வருடம்

சனி திசை காலம் - **19** வருடம்

புதன் திசை காலம் - **17** வருடம்

மொத்த திசை காலம் - **120** வருடங்கள்

திசாபுத்தி என்பது அனைவருக்கும் கேது திசையில் இருந்து ஆரம்பிக்காது. அவரவர் ஜென்ம நட்சத்திரங்களின் அடிப்படையில் திசையானது ஆரம்பிக்கும். ஒவ்வொரு கிரகத்திற்கும் மூன்று நட்சத்திரங்கள் என ஒன்பது

கிரகங்களுக்கும் **27** நட்சத்திரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள நட்சத்திரங்கள் பின்வருமாறு:**

அஸ்வினி, மகம், மூலம் - கேது
பரணி, பூரம், பூராடம் - சுக்கிரன்
கார்த்திகை, உத்திரம், உத்திராடம் - சூரியன்
ரோகிணி, அஸ்தம், திருவோணம் - சந்திரன்
மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் - செவ்வாய்
திருவாதிரை, சுவாதி, சதயம் - ராகு
புனர்பூசம், விசாகம், பூரட்டாதி - குரு
பூசம், அனுஷம், உத்திரட்டாதி - சனி
ஆயில்யம், கேட்டை, ரேவதி - புதன்

## மேஷ லக்னம்

### சூரிய திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்:

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுக்கு சூரியன் நட்பு என்ற முறையிலும், மேஷத்தில் சூரியன் உச்சம் அடைகின்றார். சூரியன் உச்சம் பெற்று திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்களை பற்றி காண்போம்.

அரசு தொடர்பான துறைகளில் ஈடுபடக்கூடியவர்கள்.

எதிலும் தைரியத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

பூர்வீக சொத்துக்களால் லாபம் அடையக்கூடியவர்கள்.

தந்தை வழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும்.

புத்திரர்களின் மூலம் ஆதாயம் உண்டாகும்.

மக்கள் தொடர்பான துறைகளில் கீர்த்தி உண்டாகும்.

சுயதொழிலில் எண்ணிய லாபம் உண்டாகும்.

வெளிவட்டாரங்களில் செல்வாக்கு மேம்படும்.

ஆன்மிக பணிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டாகும்.

சாமர்த்தியமாக செயல்பட்டு எண்ணிய எண்ணத்தை செயல்படுத்தக்கூடியவர்கள்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் சூரியன் பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும், சூரிய ஓரையில் சிவபெருமானை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

**சந்திர திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்:**

மேஷ லக்னத்திற்கு அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், சந்திரன் நட்பு என்ற நிலையில் சமம் என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வீடு, மனை யோகங்கள் உண்டாகும்.

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றி மறையும்.

மனதிற்கு பிடித்த வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

தொழில் திறமையால் லாபகரமான சூழல் உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும்.

ஆன்மிக பயணங்கள் செல்வதற்கான வாய்ப்புகள் உண்டாகும்.

நீர்ப்பாசனம் தொடர்பான செயல்பாடுகளால் லாபம் அதிகரிக்கும்.

வெளியூர் பயணங்கள் சென்று வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

தாய்வழியில் இருந்து வந்த சொத்து தொடர்பான பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் சந்திரன் பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் திங்கட்கிழமைதோறும், சந்திர ஓரையில் சாந்த சொரூபமாக உள்ள பார்வதிதேவியை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

**செவ்வாய் திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்:**

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். இங்கு செவ்வாய் ஆட்சி பெற்று திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்களை பற்றி காண்போம்.

உடல் தோற்றப்பொலிவு மேம்படும்.

செய்யும் செயல்களில் கீர்த்தி உண்டாகும்.

ஆடை மற்றும் ஆபரணச்சேர்க்கை உண்டாகும்.

பணியில் எதிர்பார்த்த இடமாற்றம் சாதகமாகும்.

வெளிவட்டாரங்களில் செல்வாக்கு மேம்படும்.

மனதில் புதுவிதமான லட்சியங்களை உருவாக்குவீர்கள்.

வெளியூர் பயணங்களின் மூலம் சாதகமான பலன்கள் உண்டாகும்.

சுபச் செயல்கள் சார்ந்த முயற்சிகளில் எதிர்பார்த்த முடிவு கிடைக்கும்.

குடும்ப பொருளாதாரம் சார்ந்த முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் செவ்வாய்க்கிழமைதோறும், செவ்வாய் ஓரையில் முருகனை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

## புதன் திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். புதன் பகவான், செவ்வாய் பகவானுடன் சமம் என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

திட்டமிட்ட காரியங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும்.

இளைய சகோதரர்களால் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அனுகூலமான சூழல் உண்டாகும்.

மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

காது தொடர்பான பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும்.

பூமி விருத்திக்கான பணிகளில் முன்னேற்றமான சூழல் உண்டாகும்.

விலை உயர்ந்த பொருட்களை கையாளும்போது கவனம் வேண்டும்.

உத்தியோகத்தில் பதவி உயர்வு சாதகமாகும்.

எதிர்பாராத சில விரய செலவுகள் ஏற்பட்டு நீங்கும்.

நெருக்கமானவர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும்.

வழக்கு தொடர்பான செயல்பாடுகளில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் புதன் பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் புதன்கிழமைதோறும், புதன் ஓரையில் பெருமாளை துளசி மாலையை கொண்டு வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

## குரு திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், குருபகவான் நட்பு என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும், ஆதாயமும் உண்டாகும்.

முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும்.

வாழ்க்கை பற்றிய அனுபவ அறிவு மேம்படும்.

உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும்.

உயர்கல்வி சார்ந்த எண்ணங்கள் மற்றும் முயற்சிகள் ஈடேறும்.

உறவினர் மற்றும் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும்.

குடும்பத்தில் பெரியோர்களின் ஆதரவுகள் கிடைக்கும்.

புதிய ஆராய்ச்சி தொடர்பான செயல்பாடுகளால் அலைச்சல் அதிகரிக்கும்.

நண்பர்களுடன் கேளிக்கையில் ஈடுபட்டு மனம் மகிழ்வீர்கள்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் குரு பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் வியாழக்கிழமைதோறும், குரு ஓரையில் தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக்கடலை படைத்து வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

**சுக்கிர திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்**

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், சுக்கிர பகவான் சமம் என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

குடும்ப பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

எதிர்பார்த்த சுபச்செயல்கள் ஈடேறும்.

நண்பர்களின் மூலம் அனுகூலமான வாய்ப்புகள் ஏற்படும்.

உடலில் இருந்து வந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பு உண்டாகும்.

ஆடை, ஆபரணம் வாங்குவதில் விருப்பம் உண்டாகும்.

புதிய கூட்டாளிகளின் மூலம் மாற்றமான சூழல் ஏற்படும்.

மனைவி வழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கும்.

பிள்ளைகளுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றமான சூழல் ஏற்படும்.

உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு சாதகமாகும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் சுக்கிரன் பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் வெள்ளிக்கிழமைதோறும், சுக்கிர ஓரையில் மகாலட்சுமியை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

**சனி திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்**

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், சனிபகவான் பகை என்றாலும் நீசம் என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

அனுபவ அறிவு மேம்படும்.

தொழில் சார்ந்த செயல்பாடுகளில் சிந்தித்து செயல்படவும்.

ஆன்மிக எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் உண்டாகும்.

மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் காலதாமதமாக கிடைக்கும்.

அரசு தொடர்பான செயல்பாடுகளில் நிதானம் வேண்டும்.

சுபச் செயல்கள் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும்.

கலைஞர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் காலதாமதமாக கிடைக்கும்.

உத்தியோகத்தில் எதிர்பாராத இடமாற்றம் உண்டாகும்.

சமூக சேவை புரிபவர்களுக்கு ஏற்ற, இறக்கமான சூழல் உண்டாகும்.

முயற்சிக்கேற்ப முன்னேற்றமான வாய்ப்புகள் உண்டாகும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் சனி பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் சனிக்கிழமைதோறும், சனி ஓரையில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி ஆஞ்சநேயரை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

## ராகு திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், ராகுபகவான் பகை என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

மனதிற்கு பிடித்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

வெளியூர் தொடர்பான பணி வாய்ப்புகள் சாதகமாகும்.

வழக்கு தொடர்பான விஷயங்களில் கவனம் வேண்டும்.

செய்யும் செயல்களில் கவனம் வேண்டும்.

நீண்ட நாள் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

நிர்வாகம் தொடர்பான முடிவுகளில் கவனம் வேண்டும்.

நண்பர்களுடன் கேளிக்கையில் ஈடுபட்டு மனம் மகிழ்வீர்கள்.

எளிதில் முடியும் என எதிர்பார்த்த சில செயல்கள் காலதாமதமாகும்.

நெருக்கமானவர்களிடம் சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும்.

உடல் ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகள் தோன்றி மறையும்.

**பரிகாரம்:**

அவரவர் ஜாதகத்தில் ராகு பலம் குறைவாக இருக்கும் பட்சத்தில் வெள்ளிக்கிழமைதோறும், ராகு ஓரையில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி துர்க்கை அம்மனை வழிபட்டு வர மேன்மை உண்டாகும்.

மேலும், ஜென்ம ஜாதகத்தில் சுபர்கள் மற்றும் அசுபர்களின் பார்வை இருக்கும் பட்சத்தில் சுப மற்றும் அசுப பலன்கள் மாறுபட்டு நடைபெறும்.

## கேது திசை நடந்தால் உண்டாகும் பலன்கள்

மேஷ லக்னத்தின் அதிபதி செவ்வாய் பகவான் ஆவார். செவ்வாய் பகவானுடன், கேதுபகவான் பகை என்ற நிலையில் இருந்து திசை நடத்தினால் ஏற்படும் சுப மற்றும் அசுப பலன்கள் பின்வருமாறு:

செயல்படும் தன்மைகளில் மாற்றம் உண்டாகும்.

அஞ்ஞான சிந்தனைகள் தோன்றி மறையும்.

மனதில் எழும் ஆசைகள் குறையும்.

பல்துறைகளை பற்றி அறிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

மனதில் பலவிதமான சிந்தனைகளின் மூலம் குழப்பான சூழல் உண்டாகும்.

குடும்ப நபர்களிடம் அனுசரித்து செல்லவும்.

புதுவிதமான செயல்பாடுகளில் விருப்பம் உண்டாகும்.